O.S.No.85/2014 Date : 13.01.2020

சாட்சி இன்று மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு அனுமதிக்கப்பட்டார்.

குு.வி.தொடர்ச்சி

ஜெயலட்சுமி என்னிடம் பெற்ற பணத்தை அந்த வீட்டிற்கு தான் கொண்டு போனாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் பெற்ற பணத்தை ஜெயலட்சுமி எங்கு கொண்டு போனார் என்று எனக்கு தெரியாது. நான் அது குறித்து ஜெயலட்சுமியிடம் எதுவும் கேட்கவில்லை. ஜெயலட்சுமியுடன், சாட்சி மாரியம்மாள் உடன்வந்தார். அவர் தான், அவரோடு உடன் போனார். ஊரில் உள்ள ஜெயலட்சுமியின் வீட்டில் தான் கோதண்டராமனும், சேதுராமனும் இருக்கிறார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஜெயலட்சுமி குடும்பத்தார்களுக்கு பாத்தியப்பட்ட வீடுகள் வரிசையாக இருந்து வருவதால் ஜெயலட்சுமி எந்த வீட்டில் குடியிருக்கிறார் என்ற விபரம் எனக்கு தெரியாது. ஊரில் உள்ள வீடுகளில் ஏதாவது வீடு ஜெயலட்சுமி பெயரில் உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. புரோநோட்டில் சொல்லப்பட்டுள்ள முகவரி எந்த வீட்டிற்கானது என்பதும் எனக்கு தெரியாது. புரோநோட்டில் எழுதப்பட்ட சங்கதிகளுக்கு விபரம் சொன்னது ஜெயலட்சுமி தான். புரோநோட்டில் மேலத்தெரு என்று தான் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அவருடைய வீடு தெற்கு தெருவில் உள்ளது என்றால் மேற்கிலும் ஒரு வீடு உள்ளது. அந்த வீடு சீனிவாசனால் கட்டப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் கொடுத்த ரூ.7 லட்சத்தை என் வீட்டில் உள்ள இரும்பு பெட்டியில் வைத்திருந்தேன். நான் கொடுத்த ரூ.7லட்சத்தை மொத்தமாக பீரோவில் வைத்திருக்கவில்லை. நான் 3 1/2 லட்சம் வைத்திருந்தேன். பாதி 3 1/2 லட்சத்தை கடன் வாங்கினேனா என்றால் கடன் வாங்கவில்லை, எனது மாமா, சித்தி ஆகியோர்களிடம் ஏற்கனவே கொடுத்து வைத்திருந்தேன், அதை பெற்றேன். இந்த விசயத்தை ஏற்கனவே நான் சாட்சியாக விசாரிக்கும்பொழுது சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். நான் தற்போது தான் இந்த விபரத்தை சொல்லுகிறேன் என்றாலும், இதற்கு முன்பு விசாரிக்கப்படும்பொழுது சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. நான், என் மாமாவிடமும், சித்தியிடமும் பணத்தை கொடுத்து வைத்திருந்ததற்கு ஏதேனும் காரணம் உண்டா என்றால் அவர்கள் என்னிடம் கைமாற்றுப் பணம் கேட்டு இருந்தார்கள், அதனால் கொடுத்து

வைத்திருந்தேன். நான் கைமாற்று கொடுத்து 2 மாதத்திலேயே திரும்ப வாங்கிவிட்டேன். அவர்கள் கைமாற்று பணத்தை வைத்து சொத்து எதுவும் வாங்கவில்லை. என்னிடம் ரூ.7லட்சம் பணம் இல்லை என்றாலும், நான் 7 லட்சம் பணத்திற்கு கணக்கு காட்டுவதற்காக அவர்களிடம் கைமாற்றாக கொடுத்து வைத்திருந்தேன் என சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல. நான் இரும்பு பெட்டியில் வைத்திருந்த 3 1/2 லட்சத்தை ஓராண்டு காலமாக வைத்திருந்தேன். சாட்சி தற்போது இரண்டு ஆண்டு காலம் அவ்வாறு வைத்திருந்திருப்பேன் என் சாட்சியம் அளிக்கிறார். நான் வீட்டில் இவ்வளவு பெரிய தொகை வைத்திருந்தால் திருட்டு பயம் இல்லையா என்றால் இரும்பு பெட்டியில் வைத்திருந்தேன் அதனால் திருட்டு பயம் இல்லை. எங்கள் ஊரில் அடிக்கடி வழிப்பறி கொள்ளை நடக்கும் என்றால் சரியல்ல. விஜயரெங்கபுரம், நடராஜன் என்பவர் வீட்டில் கொள்ளை அடித்து விட்டு சென்றுவிட்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரசிடன்ஸ் ராஜகுருவிற்கு மில் உள்ளது. அவருடைய மில்லில் கொள்ளை நடந்த விபரம் எனக்கு தெரியாது. அவ்வாறு கொள்ளை நடந்ததாக பேப்பரில் செய்தி வந்தது என்றால் நான் படிக்கவில்லை. புரோநோட்டு பேனாவால் எழுதப்பட்டதா, பால்பாயிண்ட் பேனாவால் எழுதப்பட்டதா என்றால் பேனாவால் எழுதப்பட்டது. யார் முதலில் கையெழுத்து போட்டார்கள் என்றால் சாட்சியாக செல்லையா கையெழுத்து போட்டார். புரோநோட்டில் ஜெயலட்சுமி கைரேகை வைத்தார். புரோநோட்டில் செல்லையாவின் முழு முகவரி சொல்லப்படவில்லை என்றால் சரிதான். புரோநோட்டில் மாரியம்மாளின் முழுமுகவரி இல்லை என்றால் சரிதான். செல்லையா நிலப்புரோக்கராக வேலை பார்த்து வருகிறார். மாரியம்மாள் விவசாய கூலியாக வேலை பார்க்கிறார். புரோநோட்டு எழுதிய பேனாவால் தான் செல்லையாவும், மாரியம்மாளும் கையெழுத்து போட்டார்களா என்றால் கையெழுத்து போட்டதை கவனித்தேன், எந்த பேனா என்பதை நான் கவனிக்கவில்லை. செல்லையாவின் தகப்பனார் பெயரை யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. மாரியம்மாளின் கணவர் பெயரை யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. எனக்கு அப்பொழுது ஒரு போன் வந்தது அதை பேச போய்விட்டேன். புரோநோட்டில் மேற்படி தாலுகா, மேற்படி பி.ரெட்டியபட்டி கிராமத்தில் மேலத்தெருவில் வசிக்கும் என எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஜெயலட்சுமி புரோநோட்டில் எத்தனை ரேகைகள் வைத்தார் என்றால் ஸ்டாம்பில் ஒரு ரேகையும், பக்கத்தில் ஒரு ரேகையும்

வைத்தார். ரேகை ஜெயலட்சுமியின் ரேகை என்பதை பத்திர எழுத்தர் திருவள்ளுவர் எழுதினார். மாரியம்மாளும், செல்லையாவும் எழுதப் பயன்படுத்திய பேனா யாருடை பேனா என்று எனக்கு தெரியாது. ஜெயலட்சுமி இடது கை பெருவிரல் ரேகையைத் தான் வைத்தார். மேற்படி புரோநோட்டில் உள்ள இரண்டு ரேகைகளும் ஜெயலட்சுமியின் இடது கை பெருவிரல் ரேகை என்று தான் எழுதப்பட்டுள்ளது. சாட்சி தற்போது புரோநோட்டை வாங்கி பார்த்துவிட்டு ஒரு ரேகையில் தான் அவ்வாறு குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என சாட்சியம் அளிக்கிறார். ஸ்டாம்பு மேல் உள்ள ரேகை யாருடையது என குறிப்பு எழுதப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி புரோநோட்டில் ஜெயலட்சுமி என்னும் நபர் எழுதிக் கொடுத்ததாகத் தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஜெயலட்சுமியை எனக்கு 50 வருடங்களாக தெரியும். அவர் மனநிலை பாதிக்கப்பட்டவர் என்றால் இல்லை. மருத்துவர், ஜெயலட்சுமியை மனநிலை பாதிக்கப்பட்டவர் என குறிப்பிட்டு சான்று வழங்கி, சாட்சியம் அளித்துள்ளார் என்றால் ஜெயலட்சுமி மனநிலை பாதிக்கப்பட்டவர் இல்லை. நான் எனது வீட்டிலேயே இங்க்பேடு வைத்திருக்கிறேன். எனது தாயார் கைரேகை செய்வார். அதனால் நான் என்னுடைய வீட்டில் இங்க்பேடு வாங்கி வைத்திருக்கிறேன். இங்க்பேடில் மை எடுத்து புரோநோட்டில் கைரேகை வைக்க ஜெயலட்சுமிக்கு, மாரியம்மாள் தான் உதவி செய்தார். இது போன்று படிக்காத நபர்களிடம் ரேகை வாங்குவதில் மாரியம்மாளுக்கு நல்ல அனுபவம் உள்ளது என்றால் இல்லை. மாரியம்மாள், ஜெயலட்சுமியுடன் 40 ஆண்டுகாலமாக இருந்து வருகிறார் என்றால் ஒரே ஊரில் இருக்கிறார். மாரியம்மாள் தான் ஜெயலட்சுமியை அருகே இருந்து கவனித்து கொள்ளும் நபர் என்றால் இல்லை. குளத்து வேலைக்கு போகும்பொழுது இருவரும் ஒன்றாக போவார்கள். மாரியம்மாள், அவருடைய கணவருக்கு 3வது மனைவி என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மாரியம்மாள் வீடும், ஜெயலட்சுமி வீடும் பக்கத்து பக்கத்து வீடுகள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மாரியம்மாளின் பூர்வீக வீடும், ஜெயலட்சுமியின் வீடும் பக்கத்து, பக்கத்து வீடுகள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எங்கள் ஊரில் மொத்தம் 350 வீடுகள் நாயக்கர் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவர்கள் ஒருவருக்கொருவர் உறவுக்காரர்கள் என்றால் ஒரே இனத்து காரர்கள், சொந்தம் பற்றி எனக்கு தெரியாது. எங்கள் ஊரில் என் உடன்பிறந்த சகோதரர்கள் இருக்கிறார்கள். என் தகப்பனாரோடு உடன்பிறந்த அத்தை

இருக்கிறார். ரெட்டியபட்டியில் எல்லோரும் ஒரே இனத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். நான் 1982 ஆம் ஆண்டிலிருந்து 1990 ஆம் ஆண்டு வரை வெளிநாட்டில் இருந்தேன். மாதம் ரூ.30ஆயிரம் சம்பளம் எனக்கு கிடைக்கும். நான் சம்பளத்தை வாங்கி பேங்கில் போட்டு விடுவேன் என்றால் இல்லை, நான் அந்த பணத்தை நகையாக வாங்கிக் கொண்டு ஊருக்கு வருவேன். அங்கையும் நான் பணமாகத் தான் வைத்திருந்தேன். நான் எத்தனை கிராம் ஆக சம்பளம் வாங்கினேன் என்று எனக்கு தற்போது நினைவில்லை. நான் வெளிநாட்டில் வேலை பார்க்கும்பொழுது வருடத்தில் இரண்டு முறை இந்தியாவிற்கு வந்துள்ளேன். ஒவ்வொரு முறை நான் ஊருக்கு வரும்பொழுதும் 20 பவுன் தங்க நகை கொண்டு வருவேன். அப்படி என்றால் ஒரு வருடத்திற்கு 40 பவுன் என்றால் சரிதான். 10 வருடத்திற்கும் மொத்தமாக 400 பவுன் நகை கொண்டு வந்துள்ளேன் என்றால் சரியல்ல, சில சமயம் பணமும், சில சமயம் நகையும் கொண்டு வந்துள்ளேன். நான் வெளிநாட்டில் சென்று வந்ததற்கான பாஸ்போர்ட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியும். நான் அவ்வாறு வெளிநாட்டில் சம்பாத்தியம் செய்த பணத்தை ஜெயலட்சுமியிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அந்த பணத்தை கொண்டு நான் எனது தங்கச்சிகளுக்கு திருமணம் செய்து கொடுத்து சீர்சீராட்டுகளை செய்து இருக்கிறேன். காடுகளை வாங்கி இருக்கிறேன். நான் வெளிநாட்டிற்கு செல்ல வில்லை என்றால் சரியல்ல. அதற்கான பாஸ்போர்ட்டை என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும். 1993 ஆம் ஆண்டில் பாகபிரிவினை நடைபெற்றது என்றால் எனக்கு வருடம் நினைவில்லை. நான் வெளிநாட்டிற்கு சென்று வந்த பின்பு தான் பாகப்பிரிவினை நடைபெற்றது என்றால் சரிதான். எனக்கு 8 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது. எனக்கு பாகப்பிரிவினையில் 12 ஏக்கர் நிலம் ஒதுக்கப்படவில்லை. 4 கிணறுகள் எனக்கு பாகப்பிரிவினையில் ஒதுக்கப்பட்டது. நான் தாக்கல் செய்துள்ள பாகப்பிரிவினை ஆவணத்தில் எனக்கு 4 கிணறுகள் ஒதுக்கப்பட்டுள்ளது என்பது துலங்கவில்லை என்றால் நான் கண்ணாடி அணியவில்லை, எனவே படிக்க இயலாது. எனக்கு பாகப் பிரிவினையில் ஒரு கிணறும் 3 ஏக்கர் சொத்தும் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு பாகப்பிரிவினையில் 3 ஏக்கர் நிலம் தான் ஒதுக்கப்பட்டது என்றாலும், அந்த விபரம் தெரிந்து விடும் என்பதால் நான் பாகப் பிரிவினை ஆவணத்தை படிக்க இயலாது என சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல. சர்வே எண்.129/8ல் உள்ள

8 ஏர்ஸ் நிலம் எனக்கு பாத்தியப்பட்டது என்றால் எனக்கு சர்வே நம்பர் நினைவில்லை. சர்வே எண்.180/7ல் ஒரு கிணறு உள்ளது என்றால் சரிதான். எனக்கு மொத்தம் 107.5 ஏர்ஸ் நிலம் பாகப்பிரிவினையில் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஒரு லட்சம் ரூபாய்க்கு வருட வட்டி ரூ.12,000/- ஆகும். ரூ.7 லடசத்திற்கு வருட வட்டி ரூ.84,000/- ஆகும். ரூ.84,000/- வட்டி கொடுக்கும் அளவிற்கு ஜெயலட்சுமிக்கு வசதி, வாய்ப்பு கிடையாது என்றால் அவருடைய சொத்து விபரம் பற்றி எனக்கு தெரியாது. ஜெயலட்சுமியின் சொத்து விபரத்தை நான் என்னுடைய வழக்கில் சேர்த்திருக்கிறேன் என்றால் எனக்கு நினைவில்லை. அந்த சொத்தை நம்பி நான் ரூ.7லட்சத்தை கொடுத்தேன் என்றால் சொத்தை நம்பி கொடுக்கவில்லை, பணத்தை திரும்ப கொடுத்துவிடுவார் என நம்பி தான் கொடுத்தேன். எங்கள் ஊரில் நிறைய பேருக்கு நான் வட்டி கொடுத்திருக்கிறேன் என்றால் எங்கள் ஊரில் 1, 2 நபர்களுக்கு வட்டி கொடுத்து இருக்கிறேன். நான் ஒரு 5 ஆண்டுகளுக்கு முன்பு தான் கடன் கொடுத்தேன். தற்போது யாருக்கும் கடன் கொடுப்பது இல்லை. அவர்களிடம் எந்த ஆவணத்தை எழுதி வாங்கிக் கொண்டு பணம் கொடுத்தேன் என்றால் அவர்கள் ரூ.10,000/-, ரூ.20,000/-ம் என வாங்குவார்கள், எனவே ஆவணத்தை எழுதிக் கொள்ளவில்லை. அவ்வாறு ரூ.10,000/-, ரூ.20,000/-க்கு மேல் யாருக்கும் நான் கடன் கொடுத்தது இல்லை. ஜெயலட்சுமிக்கு தான் முதல் முறையாக ரூ.7 லட்சத்திற்கு கடன் கொடுத்துள்ளேன். ஜெயலட்சுமியிடம் சொத்து ஜாமீன் கேட்கவில்லை. ஜெயலட்சுமிக்கு பாகப் பிரிவினையில் சொத்து கிடைக்கப் பெற்றுள்ளது. அந்த சொத்தை சுப்புராஜ் அடமானம் வாங்கியுள்ளாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஜெயலட்சுமியிடம் நகை இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஜெயலட்சுமிக்கு குழந்தைகள் கிடையாது. ஜெயலட்சுமிக்கு வீடு எதுவும் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஜெயலட்சுமிக்கு நிலங்கள் உள்ளது. ஜெயலட்சுமிக்கு கணவர் கிடையாது என்றால் சரியல்ல, இருக்கிறார், ஆனால் ஊரில் இல்லை. ஜெயலட்சுமியும், அவருடைய கணவரும் 2014ல் சேர்ந்து வாழவில்லை. ஜெயலட்சுமியின் கணவர், என்னுடைய பெரியப்பா மகன் என்றால் சரிதான். அவர் பெயர் துரைராஜ். மேற்படி துரைராஜ் தற்போது வேறு திருமணம் முடித்துக் கொண்டுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவர் சமீபத்தில் எங்கள் ஊருக்கு வந்திருந்தார் என்றால் ஒரு இரண்டு

ஆண்டுகளுக்கு முன்பு வந்தி,ருந்தார். அப்பொழுது அவர், ஜெயலட்சுமியை போய் பார்க்கவில்லை என்றால் நான் அது பற்றி அவரிடம் கேட்கவில்லை. தற்போது துரைராஜ் உடல்நிலை சரியில்லாமல் இருந்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஒரு 4 ஆண்டுகளுக்கு முன்பு லிங்கவன் என்பவருக்கு சொந்தமான 5 ஏக்கர் மானாவரி நிலத்தை நான் பாடுபட்டு வந்தேன். அந்த சொத்திலிருந்து எவ்வளவு வருமானம் கிடைத்து வந்தது என்றால் ஆண்டுக்கு ஒரு லட்சம் வரும். லிங்கவன் என்பவருக்கு தென்னந்தோப்பு உள்ளது. அதை லிங்கவன் தான் பாடுபட்டு வருகிறார். இந்த விபரங்கள் லிங்கவன் மகன் சுப்புராஜ்க்கு தெரியுமா என்றால் தெரியும். நான் லிங்கவனிடம் கூலிக்கு தான் வேலை பார்க்கிறேன் என்றாலும், தற்போது வழக்கிற்காக அவருடைய நிலத்தில் பாடுபட்டதாக சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல. அய்யப்ப நாயக்கர் என்பவர் மச்சுனரின் தகப்பனார் ஆவார். எனக்கு தோப்புரெட்டியபட்டியில் முதலில் 19 ஏக்கர் காடு இருந்தது. தற்போது அதை விற்றுவிட்டேன். அதை தோப்புரெட்டியபட்டியை சேர்ந்த ராமசுப்புநாயக்கர் என்பவருக்கு விற்பனை செய்து விட்டேன். ரூ.2 லட்சத்திற்கு வாங்கி, ரூ.3 லட்சத்திற்கு விற்பனை செய்துவிட்டேன். எந்த ஆண்டு வாங்கி, எந்த ஆண்டு விற்பனை செய்தேன் என்று எனக்கு வருடம் நினைவில்லை. அந்த ரூபாய், இந்த ரூ.7லட்சத்தில் அடங்குமா என்றால் அவ்வாறு நான் பிரித்து வைத்திருக்கவில்லை. சாட்சி தற்போது ரூ.7 லட்சத்தில் மேற்படி தொகை அடங்குமா என்று நினைவில்லை என சாட்சியம் அளிக்கிறார். நான் சொத்தை வாங்கவில்லை, விற்கவில்லை என்றால் சரியல்ல.

கால அவகாசம் போதமையால் வழக்கானது குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்பட்டது.